**அக்டோபர் - 7**

**"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்."  - மத் 7 : 26.**

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் மேல் கட்டப்பட்ட கிரியையில்லாத நம்பிக்கைகள், மணலின்மேல் கட்டப்பட்ட நம்பிக்கைகளாகும். அந்தப் பெரிய சோதனை நேரம் வரும் வரை இது வெறும் நேரத்தில் பிரச்னையாகத்தான் இருக்கும். அப்பொழுது இப்படிப்பட்ட நம்பிக்கைகள் பிரயோஜன மற்றவை என்பதைவிட மிகக் கெட்டது என்று நிரூபிக்கப்படும். ராஜ்யத்தில் பங்கை அடையலாம் என்று தான் கொண்டிருந்த உறுதியில் பத்திரமாக இருக்கிறதாக எண்ணின தன்னை, அவைகள் ஏமாற்றி விட்டதாகக் காணப்படும். அதற்கு மாறாக, தன்னுடைய இருதயமும், நாவு, கர்த்தரை அறிக்கையிட்டு கனம் பண்ணிக்கொண்டும், தங்களுடைய கிரியைகள் தங்களுடைய இருதயமும், நாவு கர்த்தரை அறிக்கையிட்டு கனம் பண்ணிக்கொண்டும், தங்களுடைய கிரியைகள் தங்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொண்டும், தங்களுடைய கனிகள் கர்த்தரோடு கொண்டுள்ள ஜீவாதாரமான சம்பந்தத்தை சாட்சி கொடுத்துக்கொண்டும், கீழ்ப்படிதலோடு காட்டுகிறவர்கள் ஜீவியத்தின் பலமான எல்லாப் புயல் காற்றுகளிலும் கடந்து போவார்கள். ஒருபொழுதும் அவர்கள் அசைக்கப்படுவதில்லை. ஒருபொழுதும் குலுக்கப்படுவதில்லை. ஏனென்றால், அவர்கள் அஸ்திபாரத்தின் மேல் இருக்கிறார்கள். **- Z ’04, 36 (R 3317)**

யேசு கிறிஸ்து சொல்லிய வார்த்தைகளும், வேதாகமத்தின் உபதேசங்களும் ஒரே அர்த்தமுள்ளவைகள். ஏனென்றால், தேவன் தம்முடைய குமாரன் மூலமாக வேதகாமத்தைக் கொடுத்தார். மனுஷனாகும் முன்பும் அதற்குப் பிறகுமுள்ள நிலைகளில் இவைகள் கொடுக்கப்பட்டன. அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்பது என்பது அவைகளைப் புரிந்து கொள்ளுவதைக் குறிக்கும். அவைகள் சாந்த குணமுள்ளவர்களில் மாத்திரமே நற்பயன் உண்டாக்கும். அவைகளைப் புரிந்து கொண்டும், அவைகளின் சம்பந்தத்துக்கு உட்படாதவன் உண்மையாகவே புத்தியில்லாத மனுஷனாவான். தேவன் பிரியப்படுகிற ஒரு கிறிஸ்துவைப் போலொத்த குணத்தைத் தன்னில் அபிவிருத்தி செய்வது சம்பந்தப்பட்ட மட்டில், கர்த்தரின் நாமத்தில் அதிசயமான காரியங்களை செய்ய எடுக்கிற அவனுடைய எல்லா முயற்சிகளும் தோல்வி அடையும். மணலின் மேல் கட்டின ஒரு வீட்டைப் போல அவனுடைய விசுவாசம் கட்டடம் அவன் மீதும், உலகத்தின் மீதும் வரும் மகா உபத்திரக் காலத்தின் மழையினாலும், காற்றினாலும், புயலினாலும், வெள்ளத்தினாலும் அழிந்து போகும். **- P ’26, 156.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**நீதி 10:8; மத் 5:6; 7:24,25,27; 13:7,14,15,19-23; எசே 33:30-32; ரோம 2:13; 10:14-21; யாக் 1:19,22-25; லூக் 6:49; 11:28; 13:24-27.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 59 (R 5407).**

**வினாக்கள் : நான் வசனத்தைக் கேட்பதில் எவ்வகையைச் சேர்ந்தவன்? இந்த வாரத்தில் நான் வசனத்தை எவ்வாறு கேட்டேன்? காரணமாயிருந்தவைகளும், ஆவியும், பலன்களும் எவை?**